பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**03 03 2026 TUESDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** நிலையான வளர்ச்சிக்கான தொழில்நுட்பத்தில் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

**2)** மாணவர்களின் ஆதார் அட்டையை புதுப்பிப்பதற்கான பணிகளை மேலும் விரிவுபடுத்த இந்திய தனித்துவ அடையாள ஆணையம் முடிவு செய்துள்ளது.

**3)** தமிழகத்தில் திமுக ஆட்சியில் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

**4)** இளைஞர்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்கில் அவர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியை அளிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மாநில அரசு மேற்கொண்டுள்ளது.

**5)** பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் இடங்களின் பெயரை மாற்றி அரசியல் ஆதாயம் தேட திமுக முற்படுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குறை கூறியுள்ளார்.

**-இனி விரிவான செய்திகள் - -**

<<<<<<<>>>>>>

உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கு ஏற்ப இந்தியா தனது வர்த்தகத்தை நிர்ணயிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழி கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர், வரும் ஆண்டுகளில் நிலையான வளர்ச்சிகாணும் தொழில்நுட்பத்தில் முதலீடுகள் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் கூறினார்.

உலகச் சந்தைக்கான முதலீட்டை செலவினத்தை வைத்து மதிப்பீடு செய்யாமல், நீடித்த வளர்ச்சியை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்களில் சீர்திருத்தங்கள் கொண்டுவந்திருப்பதையடுத்து, நாட்டின் பொருளாதாரம் பெரிய அளவில் வளர்ச்சிகாணும் என்றும் அவர் தெரிவித்தார்.

உயர்திறன் கொண்ட போக்குவரத்து கட்டமைப்பு வளர்ச்சிக்கு உந்துசக்தியாக திகழும் என்றும், ரயில்வே, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், நீர்வழித் தடங்கள் ஆகியவற்றுக் இடையிலான ஒருங்கிணைப்பு வளர்ச்சிக்கு மேலும் உதவிடும் என்றும் அவர் கூறினார்.

சரக்கு போக்குவரத்து செலவை கணிசமாக குறைத்திட பன்னடுக்கு போக்குவரத்துத் திட்டம் அவசியம் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

இந்தியா அண்மையில் மேற்கொண்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் பல நாடுகளுடன் வர்த்தகத்துக்கான கதவுகளை திறந்துள்ளதாக அவர் எடுத்துரைத்தார்.

உலகத் தரத்துக்கு ஏற்ப, தரமான பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டிய பொறுப்பு உள்நாட்டு தொழில் நிறுவனங்களுக்கு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் தொழில் நிறுவனங்கள் அதிக அளவில் முதலீடு செய்து தங்களது உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

தொழில்கள் மற்றும் நிதி நிறுவனங்களில் அடிப்படை கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்திய பிரதமர் திரு நரேந்திர மோடி, நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வர்த்தகத்துக்கான மத்திய அரசின் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த

மாநில அரசுகள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>

நாடெங்கிலும் உள்ள ஒரு லட்சத்து 3 ஆயிரம் பள்ளிகளில் மாணவர்களுக்கு ஆதார் அட்டை வழங்குவதற்கான நடவடிக்கையை இந்திய தனித்துவ அடையாள ஆணையம் UIDAI மேற்கொண்டுள்ளதாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இதுவரை ஒரு கோடியே 20 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கைவிரல் ரேகை பதிவுடன் ஆதார் அட்டை விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இப்பணிக்கென நான்காயிரத்துக்கும் மேற்பட்ட கைவிரல் ரேகை பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இப்பணியை மேலும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த முயற்சியால், மாணவர்களின் கைரேகை பதிவுகள் புதுப்பிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சிரமமின்றி அரசு திட்டங்கள் மற்றும் கல்வி உதவித்தொகை பயன்களை மாணவர்கள் பெற்று வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் பல்கலைக்கழக தேர்வுகள், போட்டித் தேர்வுகள், **NEET, JEE, CUET** உள்ளிட்டத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கவும் மாணவர்களின் ஆதார் பதிவு புதுப்பிக்க வேண்டியது அவசியம் என்றும் மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் தற்போதுள்ள திமுக ஆட்சியில், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், போதை கும்பல்களை கட்டுப்படுத்த முடியாமல், மாநில அரசு

திணறுவதாகவும், சட்டம் — ஒழுங்கு மிகவும் சீர்குலைந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

காவல்துறை மீதும், திமுக அரசு மீதும் குற்றம் செய்பவர்களுக்கு எவ்வித பயமும் இல்லாத காரணத்தால், குற்றச்சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் சட்டம் — ஒழுங்கு சீர்குலைவதை தடுக்கவும், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மாநில அரசு கவலைப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

திருநெல்வேலியை அடுத்த நாங்குநேரியில் நடந்த இரட்டை கொலை சம்பவம், மாநில மக்களை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொலை செய்யப்பட்டர்களின் குடும்பங்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும என்றும், காயமடைந்தவர்களுக்கு தேவையான சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாநில அரசை, டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழக இளைஞர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பை அதிக அளவில் பெறும் வகையில், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமும்,

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும் பல்வேறு நிறுவனங்களுடன் இன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டன.

வெளிநாடுகளில் உள்ள வேலைவாய்ப்புகளை பெறும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கவும், வெளிநாடுகளில் உள்ள வேலைவாய்ப்பு நிறுவனங்களை கண்டறிந்து அவற்றில் இளைஞர்களை பணியமர்த்திடவும் இந்த ஒப்பந்தங்கள் வகை செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்டோ மொபைல் தளவாட உற்பத்தி, சுகாதாரப்பணிகள் ஆகியவற்றில் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கவும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

விளையாட்டின்போது காயம் அடையும் வீரர்களுக்கு உயர் சிகிச்சை அளிக்கும் வகையில், நுண்துளை மூட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்கான சிறப்பு உயர்தர சிகிச்சை மையத்தை சென்னையில் உள்ள பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் திறந்துவைத்தார்.

இந்த மையம் குறித்து செய்தியாளர்களிடம் விளக்கிய மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன், தென்னிந்தியாவிலேயே முதல் முதலாக விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உயர்தர சிகிச்சை மையம் தொடங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

மாநிலத்தின் எந்த பகுதியில் உள்ள கிராமமாக இருந்தாலும், காயம் அடையும் விளையாட்டு வீர்ர்களுக்கு பிரத்யேகமான சிகிச்சையை இந்த மையங்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

கோடை காலத்தில் வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாத்து கொள்வதற்கான விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட உள்ளதாகவும் திரு மா சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

பொதுமக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் இடங்களுக்கு திமுக அரசு பெயர் மாற்றம் செய்து வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், திருத்தணியில் உள்ள அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் புதிதாக கட்டப்பட்டு, அதற்கு வேறு பெயர் சூட்டப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேவையற்ற சர்ச்சையையும், பிரிவினையையும் உருவாக்கும் வகையில், அரசின் இந்த நடவடிக்கை இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

புதிதாக கட்டப்பட்ட திருத்தணி பேருந்து நிலைய கட்டுமான தரம், கழிவுநீர் வசதி, பயணிகள் அமர்வு வசதி போன்றவற்றை ஆய்வு செய்யாமலேயே அவசர கதியில் நாளை திறப்பு விழா நடத்துவது திமுக-வின் அரசியல் ஆதாயத்திற்காகவே என்றும் திரு எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார்.

*<<<<<<<>>>>>>*

உலக வனவிலங்குகள் தினத்தையொட்டி, நீலகிரி மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகளில் வரையாடு, யானை, புலி, பாறு கழுகுகள் உள்ளிட்ட அரியவகை விலங்குகள் மற்றும் பறவை இனங்களை பாதுகாப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

***(Voice Byte — சரவணன் - 40 Sec. )***

*<<<<<<<>>>>>>*

ஈரோடு மாவட்டம் அந்தியூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஈசப்பாறை, புதுக்காடு, காந்திநகர், கள்ளிமடக்குட்டை, சென்னம்பட்டி உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த 118 விவசாயிகளுக்கு நிபந்தனை பட்டாவை நீக்கி, அயன் பட்டாவை மாநில அமைச்சர் திரு முத்துசாமி வழங்கினார்.

-----------------

சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, வேலூர் மாவட்டத்தில் தேர்தல் செலவினங்களை கண்காணிப்பதற்கான ஆலோசனைக்கூட்டம் ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி தலைமையில் நடைபெற்றது.

----------------

நாகை மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் வியாபாரிகளிடமிருந்தோ அல்லது வெளி மாவட்டங்களில் இருந்தோ நெல் கொள்முதல் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் திரு ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

--------------

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாணவர்களுக்கான திறன் அலுவலகத்தை ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி திறந்துவைத்தார்.

-------------------

நாமக்கல் மாவட்டம் கொல்லமலையில் மத்திய அரசுத்துறைகள் சார்பில், பழங்குடியின விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி முகாம் இன்று நடைபெற்றது.

---------------

தேனி மாவட்டத்தில், மகளிர் தினத்தை முன்னிட்டு, மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் சார்பில் வரும் 8-ஆம் தேதி ஓட்டப்பந்தயப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

----------------------

உலக வனவிலங்கு தினத்தை முன்னிட்டு, ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட அளவிலான ஈர நில மேலாண்மை மற்றும் பாதுகாப்பு கருத்தரங்கு கூட்டம் இன்று நடைபெற்றது.

----------------

திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி அருகே பழைய இரும்புக்கடையில் நேரிட்ட தீ விபத்தில், 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் சேதமடைந்தன.

**<<<<<<<<END>>>>>>>**